**<u>STARTING TIME 11.45 A.M</u>**

**<u>IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.</u>**

**<u>O.S. No. 22/2019</u>**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 21.04.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **கண்ணன்** Father's Name :

Address :

Calling : Age :

**<u>11 முதல் 16 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கு சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என தாவா சொத்து விவரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். மொத்தம் எத்தனை சர்வே எண்களில் உள்ள சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், 2 சர்வே எண்களில் உள்ள சொத்துக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களின் சர்வே எண் என்னவென்றால், தற்போது நினைவில்லை.

2. தாவா சொத்துக்கள் நஞ்சை நிலமா அல்லது புஞ்சை நிலமா என்றால், நஞ்சை நிலமாகும். அதுபோல் தாவா சொத்துக்கள் நஞ்சை நிலமென்று தாவா சொத்து விவரத்தில் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லி உள்ளேன். தாவா சொத்துக்கள் எந்த கிராமத்தில் உள்ளது என்றும், அவைகள் நஞ்சையா புஞ்சையா

என தாவா சொத்து விவரத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.

3. தாவா சொத்துக்கள் ஆதியில் ராமம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால், சரிதான், அவர் எனக்கு பாட்டி ஆவார். ராமம்மாள் வகையறாவினர் அந்த தாவா சொத்துக்களை 03.01.1933 அன்று அம்மாக்கண்ணு அம்மாளுக்கு கிரையம் செய்தார்கள் என்றால், சரிதான். அதன் பிறகு, தாவா சொத்துக்களை அம்மாக்கண்ணு அம்மாள் முழு உரிமையாளராக இருந்து அனுபவித்து வந்தார் என்றால், சரிதான்.

4. அதன்பிறகு, அம்மாக்கண்ணு அம்மாள் கிரையம் பெற்ற தாவா சொத்துக்களை கடந்த 12.05.1944 அன்று முருகன் என்பவருக்கு அடமானகடன் பத்திரம் ஒன்றை எழுதி கொடுத்தார் என்றால், சரிதான். அந்த அடமான கடன் பத்திரத்தின் அசல் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அந்த அடமான கடன் பத்திரத்தின் பேரில், அம்மாக்கண்ணு அம்மாள் முருகன் என்பவருக்கு தாவா சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைத்தார் என்றால், சரிதான்.

5. அந்த அடமானக் கடன் பத்திரத்தை மேற்படி முருகன் என்பவர் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதிக்கு கடந்த 19.02.1951 அன்று உரிமை மாற்றம் செய்து ஆவணத்தை பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால், சரிதான்.

6. அம்மாக்கண்ணு அம்மாள் எப்போது இறந்தார் என்று தெரியுமா என்றால், தெரியாது. அம்மாக்கண்ணு அம்மாள் முருகன் என்பவரிடம் பெற்ற அடமானக்கடனையோ அல்லது அந்த அடமானக்கடனை இவ்வழக்கின் 3 ம் பிரதிவாதிக்கு மேற்படி முருகன் என்பவர் உரிமை மாற்றம் செய்து கொடுத்த பிறகு 3ம் பிரதிவாதியிடமோ திருப்பி செலுத்திவிட்டு சொத்தை மீட்டுக் கொண்டாரா என்றால், இல்லை.

7. அம்மாக்கண்ணு அம்மாள் அடமானம் வைத்த தாவா சொத்தை முருகன்

என்பவரிடமிருந்தோ அல்லது 3ம் பிரதிவாதியிடமிருந்தோ கடனை திருப்பி செலுத்திவிட்டு சொத்தை மீட்டுக் கொண்ட பிறகு, 3ம் பிரதிவாதி கடந்த 03.10.1986 அன்று தாவா சொத்துக்களை இவ்வழக்கின் 4ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால், சரிதான்.

8. 03.10.1986 தேதியிலிருந்து தாவா சொத்துக்களை 4ம் பிரதிவாதி அவரது காலம் வரையும் அவரது காலத்திற்கு பிறகு அவரது வாரிசுகளான 11 முதல் 16 வரை பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல, தாவா சொத்துக்கள் கரம்பாகவும், முட்கள் முளைத்தும் காணப்படுகிறது. தாவா சொத்துக்களுக்கான பட்டா எண் 27 என்றால், சரிதான். அந்த பட்டா 4ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

9. 3ம் பிரதிவாதியிடமிருந்து, 4ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை கிரையம் பெற்ற பிறகு, 4ம் பிரதிவாதி பெயரில் பட்டா எண் 27ன்படி பட்டா வழங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். தாவா சொத்துக்கு 4ம் பிரதிவாதி தீர்வை செலுத்தி வந்த விவரம் தெரியுமா என்றால், தெரியாது.

11 முதல் 16 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

வாதி தரப்பில் மறுவிசாரணை இல்லை.

**ENDING TIME 12.11.P.M.**

**(Sd/-. G. Yuvaraj)**

**Special Subordinate Judge,**
**Special Sub Court for L.A.O.P. Cases,**
**Arakkonam.**